# சகோதரர் சார்லஸ் தேஷ் ரசல் அவர்கள் எழுதிய தொகுதிகளை நாம் ஏன் படிக்க வேண்டும்?

கிறிஸ்து இயேசுவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே நம்முடைய பரிசுத்த பிதாவாகிய தேவனுடைய நாமத்தினாலும் அவருடைய நேச குமாரனும் நம்முடைய ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலும் நம் அனைவருக்கும் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக

அன்பான சகோதர சகோதரிகளே நாம் ஜீவிக்கிற இந்தக்காலம் தேவனுடைய தெய்வீகத் திட்டத்தின்படி இரண்டாம் உலகத்தினுடைய முடிவின் காலம் மற்றும் இது சபையினுடைய நிறைவும் அடையக்கூடிய காலம். இது ஒரு யுகத்தின் முடிவுகாலமாக இருக்கிறபடியினால் தெய்வீகத் திட்டத்தில் ஒரு யுகத்தின் முடிவு பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய காலப்பகுதியாக இருக்கும்.அந்த வகையில் நாம் ஜீவிக்கும் இந்தக்காலமும் ஆசீர்வாதமும் ஆபத்தும் நிறைந்த காலப்பகுதி ஆகும். இக்காலத்தில் வாழும் மணவாட்டி வகுப்பினர் பாத அங்கத்தினர் மிகுந்த ஆசீர்வாதம் நிறைந்த காலப்பகுதியில் மற்றும் ஆபத்தும் நிறைந்த காலப்பகுதியிலும் ஜீவிக்கின்றனர். எனவே இக்காலத்தின் சோதனையிலும் பரீட்சைகளிலும் ஒருவர் ஜெயங்கொள்ள வேண்டுமானால் இக்காலத்திற்கே உரிய தெய்வீகத் திட்டத்தினுடைய வெளிச்சம் பெற்றிருப்பது மிகவும் அவசியமாகும். இதனாலேயே சகோதரர் சார்லஸ் தேஷ் ரசல் அவர்கள் எழுதிய 6 தொகுதிகளில் இவ்வசனத்தை மேற்கோள் காட்டியிருப்பதை நாம் காண்கிறோம்.

**நீதிமொழிகள் - 4:18** ம் வசனத்தில் நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய் பிரகாசிக்கிற சூரியப் பிரகாசம் போல் இருக்கும்.

அதாவது காலத்திற்கேற்ற வெளிச்சம் பெற்றிருப்பது மிகவும் அவசியமாகும். முதலாவது சபையின் காலத்தில் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே மேசியா. நமக்காக மரித்த அவரை தேவன் உயிர்ப்பித்தார் என்றும் இந்த கிறிஸ்துவையும் அவருடைய உயிர்த்தெழுதலையும் விசுவாசித்து ஜீவிய காலம் முழுவதும் உண்மையாயிருக்கும் பட்சத்தில் ஒருவர் சபையாகக் கூடிய வாய்ப்பு முதலாம் சபையின் காலக் கட்டத்தில் இருந்ததை நாம் அறிவோம். அதே போலத்தான் 2-ம் சபையின் காலக் கட்டத்திலும் இந்த விசுவாசத்தின் நிமித்தம் வரக்கூடிய பாடுகளை சகித்து மரண பரியந்தம் உண்மையாயிருக்கும் போது ஜீவகிரீடத்தை கர்த்தர் தருவேன் என்று வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார்.

3-ம் சபையின் காலக் கட்டத்தை நாம் கவனித்தோமானால் திரித்துவக் கொள்கையின்தாக்கம் இருந்த அக்காலக் கட்டங்களில் பிதாவாகிய தேவன் அவர் தகப்பன். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அவரால் உண்டாக்கப்பட்ட சிருஷ்டிகளில் முதற்பலனானவர் என்கிற தேவ வெளிச்சத்தைப் பெற்று அதிலே ஜீவிக்கிறவர்கள் இந்த ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் அக்கால கட்டத்திற்கே உரிய பரீட்சையாக இருந்தது. அதே போலத்தான் 4, 5 மற்றும் 6 வது சபைகளின் காலகட்டத்தில் அக்கால கட்டத்திற்கே உரிய தேவ வெளிச்சத்தைப் பெற்று பரீட்சையில் ஜெயம் பெறுவாராயின் அவர் ஜெயம் பெற்ற வகுப்பினராக அங்கீகரிக்கப் படுகிறார் என்று வேத வசனங்களின் மூலம் அறிந்து கொள்கிறோம்.

நாம் ஜீவிக்கின்ற இந்த 7வது காலம் லவோதிக்கேயா சபையினுடைய காலக்கட்டம். இந்த நாட்கள் தீர்க்க தரிசனங்களின் நிறைவேறுதல்களை தற்போது நம் மாம்சீக கண்களால் காணக்கூடிய தருணத்தில் இருக்கிறோம். அதே போல ராஜாவினுடைய ராஜரீகம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் ராஜ்ய பிரசன்னம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற இக்காலத்தில் வரப்போகிற மகிமையை விசுவாசக் கண்களாலும் கண்டு களிகூறக்கூடிய காலத்திலும் நாம் இருக்கிறோம்.

அன்பான சகோதர சகோதரிகளே, விசேஷமாக இந்த ராஜ்யத்திலே மணவாளன் நம்முடைய எஜமானன் இயேசுகிறிஸ்து அவருடைய சரீர அங்கங்களை பொன்னைப் போலவும் வெள்ளியைப்போலவும் பிரித்தெடுக்க கூடிய அல்லது சுத்திகரிக்கக் கூடிய வேலையில் ஈடுபட்டிருக்கின்ற நியாயத்தீர்ப்பின் காலமாக உள்ளது என்பதை மல்கியா 3:2 ம் வசனத்தின் மூலம் நாம் அறிந்து கொள்கிறோம். இதன்மூலம் இது நியாயத்தீர்ப்பின் காலம் என்பதை உறுதிப் படுத்திக்கொள்ள முடிகிறது. இந்தக் காலப்பகுதி விசேஷமாக பாத அங்கத்தினருக்கே உரிய மகாபரிசுத்தமான விசுவாசமும் சகோதர அன்பும் பரீட்சிக்கப்படுகிற காலம்.

நமக்கு வரக்கூடிய பரீட்சைகள் அல்லது சோதனைகள் புதுமையானவையாக இருக்கும் என்று 1பேதுரு : 4.12 ல் நாம் எச்சரிக்கப்படுகிறோம். இந்த காலகட்டத்திலிருந்து தப்பிக்கவும் ஜெயங்கொள்ளவும் வேத அறிவு மிக மிக அவசியமான ஒன்றாகும். இந்த அறிவே கர்த்தரின் வலது கரத்தில் பயன்படுத்தப்பட்ட ஏழாம் நட்சத்திரமாகிய சகோ.ரசல்மூலமாக வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. இவை அடங்கியதே இந்த ஆறு தொகுதிகள். இதில் அவர் செய்த ஊழியம் எழுத்து மூலமாக உள்ளதை நாம் தெளிவாக அறிய முடியும். ஏனெனில் இவரைக் குறித்து எசேக்கியேல்

தீர்க்கதரிசன புஸ்தகத்தில் எசேக்கியேல்- 9:3 ல் **கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருக்கிற புருஷன்** என்று சொல்லப்பட்டிருக்கிறது.

உவமைகள் மற்றும் தீர்க்கதரிசனங்கள் போன்ற மறைவாயிருந்த தேவனுடைய சத்தியங்களுக்கு தேவன் இவரைக் கொண்டு தெளிவான வெளிச்சம் தந்துள்ளதையும் கண்டறிய முடிகிறது. இவைகளை நாம் வாசிக்கையில் வேத அறிவை பெருக்கிக்கொள்ளவும் முடிகிறது. அவ்வாறு தேவனுடைய சத்தியத்தினுடைய அறிவை ஒருவர் பெருக்கி கொள்ளும்போது மாத்திரமே அந்தந்த காலத்திற்குரிய பரீட்சையினின்று அவர் ஜெயங்கொண்டவராக பிரகாசிக்க முடியும். எனவே இதை உணர்ந்து முழு அர்ப்பணிப்பு செய்து நாம் ஆசீர்வாதம் பெற்றுக் கொள்வதற்கு சகோ.ரசல் அவர்கள் மூலமாக கொடுக்கப்பட்டுள்ள இந்த ஆறு தொகுதிகளும் மிகவும் அவசியமான வழிகாட்டுதல்களாக இருக்கும் என்று நாம் விசுவாசிக்கிறோம். இந்த 6 தொகுதிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்தவர்களாக இதன் முன்னுரையை நாம் கவனிக்கையில் இதன்

## முதல் தொகுதி : யுகங்களைப் பற்றின தெய்வீகத் திட்டம்

இது கி.பி.1886-ல் முதலில் ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டது. இந்தப் புத்தகத்திற்கு முதலில் **ஆயிர வருட அருணோதயம்** என்ற தலைப்பு உபயோகப்படுத்தப்பட்டது. அநேகர் இதை ஒரு கதை புத்தகம் என்று எண்ணினர். எனவே யாரும் தலைப்பை வைத்து வஞ்சிக்கப்படாதபடி சகோ.ரசல் அவர்கள் இந்த **ஆயிர வருட அருணோதயம்** என்ற தலைப்பை மாற்றி வேதாகம ஆராய்ச்சிப் பாடங்கள் என்ற பொதுவான பெயரை ஆறு புத்தகங்களுக்கும் வைத்தார். முதலாம் தொகுதியில் சிருஷ்டிகர் ஒருவர் உண்டென்று அவர் உண்டாக்கின சிருஷ்டிகள் மூலமாகவும், **வேதாகமம் தேவனுடைய வெளிப்பாடு** என்பதையும் இந்த புத்தகத்தின் மூலம் நிரூபித்துக்காட்டியுள்ளார். மேலும் தலைமுறை தலைமுறையாக மறைக்கப்பட்டு இப்போது வெளிப்படுத்தப்பட்ட தேவ இரகசியமான கிறிஸ்துவைப்பற்றிய இரகசியம் இன்னதென்றும் இதில் சொல்லப்பட்டுள்ளது.

அன்பான சகோதர சகோதரிகளே, தேவன் ஏன் தீமையை அனுமதித்தார் என்றும் நியாயத்தீர்ப்பு நாள் என்றால் என்ன? அந்த **நியாயத்தீர்ப்பு நாள்** எப்போது நடைபெறும் என்றும் நியாயத்தீர்ப்பு நடைபெறும் விதம் பற்றியும் இதில் தெளிவாக்கப்பட்டுள்ளது. **மனிதனுடைய சுபாவம், ஆவிக்குரியவர்களின் சுபாவம்**என்பவற்றின் தன்மைகள் மற்றும் தனித்தன்மைகள் இவர்களுடைய வித்தியாசம் என்ன? தேவன் எந்த வகையில் இவர்களை சிருஷ்டித்திருக்கிறார்? ஆவிக்குரியசரீரத்தையும் மாம்சீக சரீரத்தையும் எவ்வாறு வகைப்படுத்தியிருக்கிறார் என்பதையும் இந்த புத்தகத்தை வாசிக்கையில் நாம் தெரிந்துக் கொள்ள முடியும்.

மேலும் மனிதனுடைய வாழ்க்கை முறைமை பற்றின **மூன்று வழிகள்** என்கிற தலைப்பில் நம் ஆண்டவர் பேசின இடுக்கமான வழி, விசாலமான வழி, மற்றும் பெரும்பாதையான வழி இவைகளைப் பற்றின விளக்கங்கள் சொல்லப்பட்டுள்ளது. நம் முன்பாக உள்ள (CHART OF THE AGES) **தெய்வீகத் திட்டத்தினுடைய வரைபடம்** அதன் விளக்கம் ஆகியவற்றை நாம் இந்த புத்தகத்தில் காண முடியும். ஆங்கில பெரிய எழுத்துக்கள், ஆங்கில சிறிய எழுத்துக்கள், எண்கள், மற்றும் கோடுகள் மூலம் தெய்வீகத் திட்டத்தை விளக்கியுள்ளார். தேவனுடைய ராஜ்யம், கடைசி நாளாகிய யேகோவாவின் நாள் என்கிற பழிவாங்கும் நாளில் வரக்கூடிய உபத்திரவம், அது வரப்போகும்தருணம், அது ஏன் வருகிறது? இன்னும் பல அருமையான, ஆழமான விளக்கங்கள் அடங்கினதே யுகங்களைப் பற்றின தெய்வீகத் திட்டம் என்கிற இந்த முதலாம் தொகுதி.

மேற்கூறப்பட்ட காரியங்களை நிதானமாகப் படித்து தெளிவாகப் புரிந்து கொண்ட ஒருவரால் மட்டுமே இரண்டாம் தொகுதி புத்தகத்தை படித்து உணர முடியும்.

## இரண்டாம் தொகுதி : காலம் சமீபமாயிருக்கிறது

இது எழுதப்பட்ட காலம் கி.பி.1889. இதில் **தீர்க்க தரிசனங்களையும் காலக்கணக்குகளையும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை குறித்ததான விஷயங்களையும் வசனங்களை பிரித்து உணரும்படி சகோதரர் விளக்க உரை எழுதியுள்ளார்.** சிருஷ்டிப்பு துவங்கி கிறிஸ்துவின் இரண்டாம் வருகையினுடைய காலப்பகுதி வரைக்கும் உள்ள காலங்கள் 6000 வருடங்கள் என்பதை இந்த புத்தகத்திலுள்ள காலக்கணக்கின் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம். நாம் இப்பொழுது ஜீவிக்கிறது 7- வது ஆயிரவருடமாகிய 1000 வருட அரசாட்சியின் காலம் என்பதையும், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பிரசன்னம் அவருடைய வந்திருத்தல் பரோஷியா 1874-ல் துவங்கிவிட்டது என்பதையும், புறஜாதியினுடைய காலம் முடிவடைந்தது.

1914-ம் வருடம் என்பது போன்ற காரியங்களை இந்த புஸ்தகத்தை வாசிக்கும்போது நாம் அறிந்து கொள்ள முடியும். மேலுமாக யூத யுகத்திற்கும் சுவிசேஷ யுகத்திற்குமான **இணையான யுகங்களின் ஒப்பீடு** பற்றியும் சகோதரர் தெளிவாக விளக்கியுள்ளார். இந்த இணையான யுகங்களை வாசிக்கும்போது கர்த்தருடைய முதலாம் வருகையினுடைய காலத்திலே நடந்த சம்பவங்களையும், இரண்டாம் வருகையினுடைய காலத்திலே நடக்கின்ற சம்பவங்களையும் ஒப்பிட்டுப்பார்த்துப் புரிந்து கொள்வதற்கு ஏதுவாக இந்த இரண்டாம் தொகுதி காலம் சமீபமாயிருக்கிறது என்ற

தலைப்பில் நம் கரங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த முதல் இரண்டு தொகுதிகளையும் வாசித்த ஒருவரால் மட்டுமே உம்முடைய ராஜ்யம் வருவதாக என்கிற தலைப்பில் அமைந்துள்ள மூன்றாம் தொகுதியை வாசிக்கும் போது அதினுடைய உள்ளான அர்த்தங்களைப் புரிந்துக் கொள்ள முடியும்.

## மூன்றாம் தொகுதி : உம்முடைய ராஜ்யம் வருவதாக

இது கி.பி.1890-ம் வருடம் எழுதப்பட்டது. சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருப்பது போல பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும் என்கிற தேவனுடைய மகிமையைப்பற்றி இந்த அறிவு பூலோகம் முழுவதும் நிரம்பும் வரைக்கும் இந்த தேவனுடைய ராஜ்யத்தின் மூலமாக வரக்கூடிய ஆசீர்வாதம் தொடர்ந்து வரும் என்பதை இந்த தொகுதியில் நாம் தெரிந்துக்கொள்கிறோம். தானியத்தை களஞ்சியத்தில் சேர்க்கும் வேலை முன்னேறி கொண்டிருக்கிறது என்பதையும் **கதவு இன்னும் அடைக்கப்படவில்லை** என்றும் இதில் தெளிவுப்படுத்தி இருக்கிறார். **சபையினுடைய மீட்பு** பற்றிய விபரங்கள் வேத வாக்கியங்களைக் கொண்டு விளக்கிக் கூறி சபை உயர்த்தப்படும் விதத்தையும் அந்த உயர்வின் மகிமையையும் சகோ.ரசல் அவர்கள் இங்கே மிகத் தெளிவாக விளக்கி கூறியிருக்கிறார்.

**இஸ்ரயேல் தேசத்தினுடைய இழப்பு மற்றும் அதன் மறுசீரமைப்பு** இவைகளை பற்றினதான ஆழமான விஷயங்களை தேவன் இந்த தொகுதியில் வெளிப்படுத்தியுள்ளார். **எகிப்தின் மகா பிரமிடு** குறித்தும் இது கல்லால் செய்யப்பட்ட வேத புத்தகம் என்பதையும் விளக்கியுள்ளார். இவ்வளவு அருமையான விவரங்களை உள்ளடக்கிய விளக்க உரையை தேவன் சகோ.ரசல் அவர்கள் மூலமாக நமக்கு அளித்துள்ளார். ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதலில் உள்ள பல நிலைகள், **ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவது, இறுதியில் பாபிலோனின் முடிவும், அழிவும்** எப்படி சம்பவிக்கும் என்பதை தீர்க்கதரிசனத்தின் விளக்கத்தின்படி இங்கே விளக்கிக் கூறியுள்ளார்.

## நான்காம் தொகுதி : அர்மகெதோன் யுத்தம்

இந்த தொகுதியில் மேலே குறிப்பிடபட்டுள்ள மூன்று புத்தகங்களில் உள்ள காரியங்கள் எப்படி முடிவு பெறும் என்பதை உள்ளடக்கியது. இது கி.பீ.1897-ல் எழுதப்பட்டது. சுவிசேஷ யுகத்தினுடைய சகாப்தத்தின் முடிவைப் பற்றி தெரிவிக்கிறது. இந்த யுகத்திற்கு சிறப்பு அறிவு பெருகி வரக்கூடிய இந்த அறிவின் பெருக்கம் மற்றும் அறிவின் பெருக்கத்தால் வரக்கூடிய அதிருப்தி. இவைகள் மனிதனுக்கு பயத்தை அதிகரிக்க காரணமாயிருக்கிறது. இந்த பயத்தின் உச்சக்கட்டமே அர்மகெதோன் யுத்தம் அல்லது தேவனுடைய நீதியை சரிகட்டும் நாள். **முதலாளித்துவத்திற்கும்**

**தொழிலாளித்துவத்திற்கும் இடையே உள்ள போராட்டம் மற்றும் போராட்டத்தினுடைய விளைவுகள்** பற்றியும் இதிலே தீர்க்கதரிசன வசனங்களின் அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளது.

இந்த போராட்டமே இப்போதிருக்கிற மோசமான நிலையிலிருந்து படுமோசமான நிலைக்கு போகக் காரணமாகும் என்பதையும், பெயர் சபை மற்றும் அதன் அமைப்புகள் மறுபடியும் உயர்வடைவதற்கு என்ன காரணம் என்பதையும், விசேஷமாக அரசாங்கம் என்ற கப்பல் கவிழ்ந்து போகாதபடிக்கு பெயர் சபை மற்றும் சமயம் சார்ந்த அமைப்புகள் எவ்வகையில் பங்கு பெறும் என்பதும் இதிலே கூறப்பட்டுள்ளது. யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் உண்டாயிராத ஆபத்துக் காலம் வரும் என்று வேதாகமம் கூறும் வார்த்தைக்கு விளக்கமும், **மகா உபத்திரவத்தின் நாளின் கடும் தாக்கத்தைப் பற்றி இத்தொகுதி தெளிவாக்குகிறது.** அதற்குப் பிற்பாடு சகல ஜாதிகளாலும் விரும்பப்படும் ராஜ்யம் வருமென்றும், ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகிற விதம் ஆகியனவும் வசனங்களின்படி விளக்கமாக எழுதப்பட்டிருக்கிறது.

## ஐந்தாம் தொகுதி : தேவனுக்கும் மனிதனுக்குமிடையேயான ஒப்புரவாகுதல்

இந்த பகுதி கி.பி.1899-ம் வருடத்தில் எழுதப்பட்டுள்ளது. மாசு மறுவற்ற கர்த்தர் இயேசுவின் அற்புதமான பிறப்பை பற்றியும் வேத வசனம் மற்றும் தீர்க்கதரிசனங்களின் ஆதாரத்தோடும் அதே சமயம் அறிவியல் வெளிச்சத்தின்படியும் தேவன் சகோதரரைக் கொண்டு விளக்கியுள்ளார்.இப்புத்தகத்தினுடைய மையக் கருத்தே ஈடுபலி, சரிசமமான விலைக்கிரையம் என்பதாகும். **வேதாகமத்தின் மையக் கருத்து கர்த்தரின் ஈடுபலி** என்றும் ஈடுபலி கொடுத்த கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றின வேத எழுத்துக்களின் விளக்கவுரையும் அடங்கினது இப்புத்தகம். **ஒப்புரவாகுதலின் மத்தியஸ்தர் இயேசுகிறிஸ்து** என தெளிவாக இந்த புத்தகம் கூறுகிறது. ஈடுபலியின் புண்ணியம் இன்னும் ஏன் உலகத்தில் செயல்படவில்லை, மேலும் திருச்சபையின் தேர்வு பற்றியும் இதில் கூறப்பட்டுள்ளது. உலக இரட்சிப்புக்கு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் ஈடுபலியே போதுமானது. சபை அதில் பங்கு பெற தேவன் தயவு செய்திருக்கிறார் என்பதும் இதில் கூறப்பட்டுள்ளது. மனிதனுடைய சரீரம் எவ்வளவு நேர்த்தியாக மேன்மையாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது, **ஆத்துமா** என்பது தனி வஸ்து அல்ல உயிருள்ள மனிதனுக்கு பெயரே ஜீவ ஆத்துமா என்பதை வேத ஆதாரத்தோடு அருமையாக விளக்கப்பட்டுள்ளது.

ஒப்புரவாகுதலின் தேவனுடைய தெய்வீக திட்டம் எவ்வகையில் நிறைவேறுகிறது என்பதையும் நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பரிந்து பேசுகிறவராயிருக்கிறது எப்படி என்றும் மத்தியஸ்தராக இருப்பது எவ்வதத்தில்

என்பதையும் இந்த தொகுப்பு நமக்கு வெளிகாட்டுகிறது. சகோ.ரசல் அவர்கள் இந்த புத்தகங்களுக்கு புதிதாக விளக்க உரைகள் எழுதப்பட்டாலும், அவை ஆசிரியரின் முன்னுரையை கருத்தில் கொண்டதாக அமைய வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார். இந்த ஐந்து தொகுதிகளையும் அதின் விளக்கவுரைகளையும் வாசிக்கின்ற சகோதர சகோதரிகள், இதே ஆவலோடு ஆறாம் தொகுதியினுடைய முன்னுரையை படிக்கவும் சகோ.ரசல் அவர்கள் என கேட்டுக் கொண்டுள்ளார். இந்தவகையில் தொடர்ச்சியாக சங்கிலியைப் போல தொடர்புடையதாக இருக்கக் கூடிய ஒவ்வொரு புத்தகத்தின் முடிவிலும் அடுத்த புத்தகத்தின் ஆரம்பத்தைக் குறித்து கூறப்பட்டுள்ளதை நாம் காணமுடியும்.

## ஆறாம் தொகுதி : புது சிருஷ்டி

இந்த புத்தகம் விசேஷித்த அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. இது கி.பி.1904-ம் வருடம் எழுதப்பட்டது. இது ஒரு நெசவாளர் அழகான ஒரு கம்பளத்தை அல்லது ஒரு சால்வையை நெய்கிறது போல தேவனுடைய ஊழியக்காரர்களை நேர்த்தியாக தெரிந்தெடுத்து வனைந்துகொண்டிருக்கிறார். உலகத்தை அல்லது பூமியை சிருஷ்டித்த விதம் அறிவியல் பூர்வமான ஆதாரத்தோடும், வரலாற்றுப் பூர்வமான உண்மையோடும், ஒவ்வொன்றையும் சாதகமான சூழ்நிலையில் தேவன் உண்டாக்கியிருப்பதை நாம் இந்த புத்தகத்தின் மூலம் புரிந்து கொள்ளலாம். அதே சமயம் மற்ற சிருஷ்டிகளை எல்லாம் சாதகமான சூழலில் உருவாக்கிய **தேவன் புது சிருஷ்டியை மாத்திரம் சாதகமில்லாத சூழலில் உருவாக்குகிறார்.** அந்த சாதகமற்ற நிலையிலும் அவர்கள் எப்படி வளர்ச்சியடைந்து அந்த மகிமையை சுதந்தரித்துக் கொள்ள முடியும் என்கிற காரண காரியங்களையும், தேவன் அவருடைய குமாரன் மூலம் வெளிப்படுத்தின சத்தியத்தின் விளக்கவுரைகளை சகோ.ரசல் அவர்கள் மூலமாக நமக்கு தெரிவிக்கிறார்.

தெய்வீக சத்தியத்தை இதில் நாம் கண்டறிய முடியும். உலகின் ஜனங்களிலிருந்து கர்த்தர் தனக்கு சீஷர்களை தெரிந்து கொண்டு அவர்களை எவ்விதமாக **நீதிமானாக்குகிறார்**? நீதிமானாக்கப்பட்டவர்களை எவ்விதத்தில் **பரிசுத்தமாக்குகிறார்**? பரிசுத்தமாக்கப்படுதல் என்பது ஒரு வெளிப்புறமான விஷயம் அல்ல என்பதையும், அது முழுமையான அர்ப்பணிப்பை உள்ளடக்கிய காரியம் என்பதையும், அந்த **முழுமையான அர்ப்பணிப்பு** பற்றிய வேத வசனங்கள் **பலியின் ஜீவிய வாழ்க்கை** என்று பிரதிபலிக்கிற விஷயங்களையும் சகோ.ரசல் அவர்கள் இங்கே வசனம் வாரியாக விளக்கி கூறியுள்ளார்.

பிரித்தெடுக்கப்பட்டவர்கள் **Ecclesia** என்கிற ஜனங்கள் சபையாக ஒருமைப்பாட்டோடு கூடி அவர்கள் தேவனுடைய ஜனங்களாக அவரை ஆராதனை செய்யவும், அன்பிலே பக்தி விருத்தியடையவும், அவர்களுக்கு ஏதுவான காரியங்களை தேவன் இந்த புத்தகத்திலே வடிவமைத்துக் கொடுத்து சபை கூடுதலை விட்டு விடாதிருங்கள் என்ற அப்.பவுலின் வசனத்திற்கு விளக்கத்தையும் இதிலே நாம் காணலாம். அவ்வாறு கூடி வரக்கூடிய சபையிலே பரிசுத்தவான்களுடைய கூடுகையிலே சபையினுடைய ஊழியக்காரர்களாகிய **மூப்பர் மற்றும் உதவிக்காரர்கள்** இவர்களை தெரிந்தெடுக்க கூடிய விதம் இவர்களுடைய **தகுதிகள்** மற்றும் இவர்களுடைய **வேலைகள்** இந்த வேலைகளை செய்வதினாலே அவர்களுக்கும் சபைக்கும் வரக்கூடிய சிலாக்கியங்கள், **ஆசீர்வாதங்கள்** என்ற தெய்வீக ஒழுங்கு முறையை இந்த புத்தகத்தில் சிறப்பாக விளக்கி கூறியிருக்கிறார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாகவும் அப்போஸ்தலர்கள் மூலமாகவும் ஏற்படுத்தப்பட்ட இந்த **தெய்வீக ஒழுங்குமுறை** சபையின் மத்தியில் எவ்விதம் செயல்பட வேண்டும் என்பதையும் கூறுகிறது. ஒவ்வொரு தலைப்பு வாரியாக **பரலோகத்தினுடைய முதல் பிரமாணம் ஒழுங்கே** என்று ஆறாம் தொகுதி பக்கம் 386 இதிலே சொல்லப்பட்டுள்ளது. அந்த பரலோகத்தினுடைய பிரமாணம்ஒழுங்கே என்பதையும் வலியுறுத்தி விளக்கப்பட்டுள்ளது. இந்த ஒழுங்கு சபையில் எப்படி இருக்க வேண்டுமென்றும் குடும்பத்திலே எப்படி இருக்க வேண்டுமென்றும் குழந்தைகளிடத்திலே, கணவன் மனைவியிடத்திலே இந்த தெய்வீக ஒழுங்கு முறை எவ்வாறு கையாளப்பட வேண்டும்? பெற்றோர்களிடத்தில் இந்த தெய்வீக ஒழுங்குகள் எப்படிச் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதையும், மேலும் உலகத்தின் மத்தியிலே ஜீவிக்கிறபோது அவர்கள் மத்தியில் எவ்வாறு தெய்வீக ஒழுங்கு முறை கடைப்பிடிக்க வேண்டும் என்றும் வேத வசன விளக்கத்தோடு கூறப்பட்டுள்ளது.

மேலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாகவும், அப்போஸ்தலர்கள் மூலமாகவும் போதித்த தேவனுடைய ஆலோசனைகள் தெள்ளத்தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளது. மற்ற ஐந்து தொகுதிகளைக் காட்டிலும் இந்த ஆறாம் தொகுதி விசேஷமாக பரிசுத்தவான்களுக்கு மாத்திரமே அதிகமான கிருபைகளை பெற்றுத்தரக்கூடிய ஒழுங்குமுறைகளை விளக்கிக்காட்டக் கூடியதாக உள்ளது.

உலகின் எந்த புத்தகமும் சொல்லாத அதே சமயம் வேதாகமத்தில் மாத்திரம் சொல்லப்பட்டிருக்கிற உயிர்த்தெழுதலினுடைய கொள்கைகளையும் அதன் இரகசியங்களையும் தனித்தன்மைகளையும் வேத வசனங்களை ஆதாரமாகக் கொண்டு இந்தப்புத்தகம் விளக்குகிறது. மற்ற ஐந்து தொகுதிகளும் தேவனுடைய தெய்வீகத் திட்டம் அதில் கிறிஸ்துவின் மகத்துவம், அது நிறைவேறும் விதம்,

நிறைவேறும் காலம் பற்றியும் விளக்கியுள்ள போதிலும் ஆறாம் தொகுதி விசேஷமாக தேவனுடைய இராஜ்யத்தில் பங்கு பெறக்கூடிய பங்காளிகள் பற்றியும், ராஜாக்கள் பற்றியும், அவர்கள் தெரிந்தெடுத்தல் பற்றியும் அவர்கள் பொறுப்புகள் மற்றும் கடமைகள் பற்றியும், அவர்களுடைய ஆசீர்வாதங்கள், அவர்களுக்கே உரிய இந்த யுகத்திற்கான விசேஷித்த சிலாக்கியங்கள் இவைகளை எல்லாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோடு மகிமையில் பங்கடையக்கூடிய அந்த மகத்துவங்கள் இவைகள் அனைத்தையும் செவ்வனே உள்ளடக்கியதாக இந்த ஆறாம் தொகுதி உள்ளது. ஏழாம் சபையின் பாத அங்கமாகக் கூடிய வகுப்பினருக்கு இது மிகவும் அவசியமான விளக்கவுரையாகும்.

சகோ.ரசல் அவர்கள் எழுதின ஆறு தொகுதிகளும் நமக்குக் கிடைத்த அரிய பொக்கிஷம்.

| | | |
|---|---|---|
| முதல் தொகுதி | : **யுகங்களைப் பற்றின தெய்வீகத் திட்டம்** | - கி.பி.1886 |
| 2ம் தொகுதி | : **காலம் சமீபமாயிருக்கிற** | - கி.பி.1889 |
| 3ம் தொகுதி | : **உம்முடைய ராஜ்யம் வருவதாக** | - கி.பி.1890 |
| 4ம் தொகுதி | : **அர்மகெதோன் யுத்தம்** | - கி.பி.1897 |
| 5ம் தொகுதி | : **தேவனுக்கும் மனிதனுக்குமிடையேயான ஒப்புரவாகுதல்** | - கி.பி.1899 |
| 6ம் தொகுதி | : **புது சிருஷ்டி** | - கி.பி.1904 |

சகோ.ரசல் அவர்கள் கர்த்தரின் வலது கரத்தில் ஏழாம் நட்சத்திரமாக அறியப்படுகிறார். தேவன் தம்முடைய குமாரன் மூலம் வெளிப்படுத்தியுள்ள பரிசுத்தமான வசனங்களின் மறை பொருள்களை அறிந்து கொள்ள நாம் கிருபை பெற்றுள்ளோம். உலகிலேயே விசேஷமாக நம் தமிழ் மொழியில் மாத்திரமே ஆறு தொகுதிகளும் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. இவைகளை நாம் எந்த நெருக்கடியான சூழலிலும், முறையாக, தினம்தோறும் வாசிப்பதற்கு ஏதுவாகஒவ்வொரு அதிகாரமும் வரிசைக்கிரமமாக ஒழுங்குபடுத்தப்பட்டு நம்முடைய கரங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிராந்திய மொழிகளிலேயே தமிழ் மொழியில் மாத்திரமே நாம் அனைவரும் பயன்படுத்தும்படிக்கு தேவன் ஏற்பாடு செய்துள்ளார்.

இதற்காக பிரயாசப்பட்ட இப்பொழுது பிரயாசப்பட்டுக் கொண்டிருக்கிற மற்றும் வாசித்து பிரயோஜப்படுத்திக்கொள்ளும் ஒவ்வொருவருக்காகவும் நம்முடைய தனிப்பட்ட முறையில் நம் ஜெபத்தை ஏறெடுப்போம். நம் கரங்களிலே கிடைத்திருக்கிற இந்த பொக்கிஷத்தின் மகத்துவங்களையும், தேவன் நமக்காக தந்துள்ள ஆலோசனைகளையும் இந்த 6 புத்தகங்களையும் வாசித்து தெய்வீக ஒழுங்கின் நியமத்திற்குள்ளாக பங்கெடுப்போம். அன்பான சகோதர சகோதரிகளே இவைகளை நாம் வாசிக்கவும் புரிந்து கொண்டு இவற்றை கைக்கொள்ளவும் தேவன் தாமே அவருடைய குமாரன் மூலமாக நம் அனைவரையும் ஆசீர்வதித்து வழி நடத்துவாராக்

ஆமென்

**குறிப்பு:-**

இது சகோதரர்கள் பேசின ஒலி நாடாவின் எழுத்து வடிவமே தவிர, **சகோ.ரஸல்** அவர்களுடைய கட்டுரையின் **மொழி பெயர்ப்பு அல்ல.**